**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 94/2021**
**Sessions :**
**Deposition of Witness for :PW5 , LW5**

| | |
|---|---|
| Name | :அரவிந்ராஜ் |
| Father's/Husband Name | :ஏழுமலை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 7th day of September** 2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது பேக்கரணை கிராமத்தில் குடியிருந்து ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 சத்தியமூர்த்தி மற்றும் அ.சா.2 சுஜாதா ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கும் தெரியாது.

2.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. யாருக்கும் யாருக்கும் சண்டை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**3.(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

1. கடந்த 17/12/2020 ம் தேதி காலை 10.30 மணியளவில் சத்தியமூர்த்தி என்பவரின் வீட்டருகே துப்புறவு பணியாளர்கள் துப்புறவு பணியை செய்து வந்தபோது அ.சா.1 சத்தியமூர்த்தி ஏற்கனவே துப்புறவு

செய்ததை எடுக்காமல் அதன் மேலேயே குப்பையை கொட்டுவதாக சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

2. இது குறித்து அ.சா.1 சத்தியமூர்த்தி யார்யாரிடம் கேட்டார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. முன்விரோதம் காரணமாக 19/12/2020 தேதி 1.30 மணியளவில் சுஜாத்தாவை ஆஜர் எதிரிகள் சண்டைபோடும் நோக்கத்தோடு வழிமறித்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. ஆஜர் எதிரிகள் சுஜாத்தாவை அசிங்கமாக திட்டி கையால் அடித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் எதிரியான தியாகராஜன் என்பவர் அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் சுஜாத்தாவை கையில் வெட்டிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் ஆஜர் எதிரிகள் சுஜாத்தாவை பார்த்து குடும்பத்தோடு கொலை செய்துவிடுவதாக மிரட்டிய விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது.

4.மேலே சொன்ன விவரத்தை நான் கேள்விப்பட்டதாக போலிஸ் விசாரணையில் செல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate

**Cheyyur.**